3.09.2025 Mcop .93/2023 ம.சா.1 மசூது

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரண

எனக்கு ஒரு மகனும், ஒரு மகளும் இருந்தார்கள். எனது மகன் இருசக்கர வாகனத்தில் சென்ற போது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். என் மகன் ஒட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் யார் என்றால் அது வாடகை வண்டியாகும். அதன் உரிமையாளர் யார் என்று எனக்கு தெரியாது. என் மகன் ஒட்டிசென்ற வாகனத்திற்கு காப்பீடு இருந்ததா என்றால் தெரியாது. என் மகனுக்கு ஒட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரிதான். என் மகனின் வயதை காட்டக்கூடிய எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மகன் படித்தற்கான கல்விசான்று தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். என் மகன் படித்த படிப்பு சம்பந்தமான வேலை செய்யவில்லை என்றால் சரிதான். என் மகன் வேறு வேலை செய்து வருமானம் ஈட்டி வந்தார் என்பதற்கு எந்தவிதமான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயம் எனது மகனுக்கு வருமான வரக்கூடிய எந்த வேலையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாபா ஹோட்டலில் வேலை செய்து தினமும் ரூ.1000/-பெற்று வந்தார். மேற்படி விபரத்தை என் மனுவிலும், என் முதல்விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றும், மனுவிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு காரணம் என் மகன் ஒட்டி சென்ற இருசக்கர வாகனத்தை வேகமாக ஒட்டி வந்து பேரூந்தின் வலதுபுறமுள்ள பின்சக்கரத்தில் மோதிவிட்டார் என்றால் சரியல்ல. எனதுமகன் சரியாக தான் ஒட்டிசென்றான். அந்த பேரூந்து சிக்னல்

இல்லாமல் திரும்பியதால் விபத்து ஏற்பட்டது. விபத்தானது பகலில் அகலமான சாலையில் நடந்தது என்றால் சரிதான். விபத்திற்கு என் மகன் தான் காரணம் என்றால் சரியல்ல. இந்த மனுவிற்கு என் மகன் ஒட்டி சென்ற வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீடு நிறுவனம் அவசியதரப்பினர் என்றால் சரியல்ல. என் மகன் ஒட்டுனர் உரிமம் இல்லாமல் இருசக்கர வாகனத்தை இயக்கியதால் 1ம்எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. எனது மகனுக்கு இழப்பீடு கொடுக்க வேண்டுமெனில் இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீடு நிறுவனம் மட்டுமே செலுத்த கடமைப்பட்வர் என்றால் சரியல்ல. என் மனு தள்ளுபடி செய்யதக்கத என்றால் சரியல்ல. விபத்திற்கு 1ம்எதிர்மனுதாரர் காரணம் இல்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு தொகை மிக அதிகமானது என்றால் சரியல்ல.

(1ம்எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணையை 2ம்எதிர்மனுதாரர் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்படதாக தெரிவிக்கப்பட்டது)

(ஒம்)எஸ்.முருகவேல்,

கூடுதல் சார்பு நீதிபதி,

தென்காசி.